ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# வளைகுடா நாடுகளில் மானுடவியல் சார்ந்த தமிழ் அமைப்பினரின் பண்பாட்டுக் கூறுகள்

**அ. ரெங்கநாயகி[1] & முனைவர் ஞா. பழனிவேலு[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். மின்னஞ்சல் : kayaltamil2009@gmail.com**

**[2] இணைப்பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**ஆய்வுச் சுருக்கம்**

வளைகுடா நாடுகளில் செயல்பட்டு வரும் தமிழ் அமைப்புகளின் பண்பாட்டுக் கூறுகளை மானுடவியல் நோக்கில் ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது. இன்றைய சமூகச் சூழலில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் தங்களின் மொழி, பண்பாடு, மரபு மற்றும் இன அடையாளத்தை எவ்வாறு பாதுகாத்து வருகின்றனர் என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. வளைகுடா நாடுகளில் உள்ள தமிழ் அமைப்பினர் தமிழர் இனத்தின் அடையாளம், மொழி, பண்பாட்டு நினைவகம் மற்றும் சமூக ஒற்றுமையைப் பாதுகாக்கும் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியல், சமூக மாற்றங்கள் மற்றும் தலைமுறை தொடர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கான புதிய மானுடவியல் பார்வையையும் இவ்வாய்வு வழங்குகிறது.

**முன்னுரை**

மனித குலம் ஒன்றிணைந்து வாழும் அமைப்பே சமுதாயமாகும். இச்சமுதாயத்தில் உள்ள அமைப்புகள் தங்களது பண்பாட்டுக் கூறுகளை மறவாது பேணிக்காப்பது மிகவும் இன்றியமையாததாகும். சமுதாயச் சிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது புலம்பெயர்ந்த தமிழர்களை ஒன்றிணைக்கும் தமிழ் அமைப்புகளே எனில் அது மிகையல்ல. அவ்வகையில் வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்கள் இணைந்து மானுடம் சார்ந்து பண்பாட்டுக் கூறுகளை வளர்ப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் அடிப்படைக் கூறாகும். அவ்வகையில் சமுதாயம் வளர்வதற்குக் காரணமான மாந்தர்களின் சிறந்த வாழ்வியல் முறைகளையும் பண்பாட்டு நெறிகளையும் மக்களிடையே மனிதநேயப் பண்புகள் வளர்வதற்கு உறுதுணையாக உள்ள அமைப்பின் செயல்பாட்டினைப் பற்றி இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**திறவுச் சொற்கள்** : வளைகுடா நாடுகள், பண்பாட்டு நெறிகள், மானுடவியல், மனிதம், தமிழ் அமைப்புகள்.

**மானுடவியல் விளக்கம்**

மானுடவியல் (Anthropology) அல்லது மாந்தவியல் என்பது மனித இனம் பற்றி ஆய்ந்து அறிதலாகும். இந்த மானுடவியல் மனித குலத்தின் சமூக நிலை, பண்பாட்டு நிலை, மொழி நிலை, உயிரியல் நிலை எனப் பல்வேறுபட்ட நிலைகளில் கடந்த கால மக்களையும் இக்கால மக்களையும் ஆராய்ந்து பார்க்கக் கூடியதாகும். மானுடவியல் என்பதற்கு ஆங்கிலத்தில் Anthropology என்பர். இச்சொல்லானது Anthropes (மனித), Logia (படிப்பு) என்ற கிரேக்கச் சொற்களின் இணைப்பாகும். அதாவது மனிதக் குழுவைப் பற்றிய படிப்பு அல்லது ஆராய்வது என்று பொருளாகும்.

**மானுடவியல் மொழியியல்**

மானுடவியல் மொழியியல் (Anthropological Linguistics) என்பது மானுடம் சார்ந்த மொழி, பண்பாடு இவற்றைப் பற்றி ஆய்வு செய்வதாகும். அவ்வகையில் தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் மனித இனம் தோன்றிய நாள் முதல் இன்று வரை உலகிற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்வதைப் பற்றி நாம் அறிந்ததே. மானுடம் என்ற சொல்லானது மனிதகுலம் முழுமையும் உள்ளடக்கிய ஒரு சொல்லாகும். அதில் மனிதம் என்பது ஒரு பிரிவாகும். மனிதம் என்பதற்கு ஒரு மனித உயிரானது பிற உயிர்கள் துன்பப்படும் போது எவ்விதப் பலனையும் எதிர்பாராது உதவி செய்தலை மனிதம் என்பர். இந்த மனிதம் என்பது தான் ‘மனிதநேயம்’ என வழங்கலாயிற்று. அவ்வகையில் வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்களும் தமிழ் அமைப்பைச் சார்ந்தோரும் மனிதத்தோடு விளங்குவதைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை விளங்குகிறது.

**பண்பாட்டு மானுடவியல்**

மானுடவியல் என்னும் ஆய்வுப் பரப்பானது மிகவும் பரந்துபட்ட ஒன்றாகும். அதில் பண்பாடு என்னும் உட்பிரிவு மிகமிக இன்றியமையாத ஒன்றாகும். ஒரு கணிதத்திற்குச் சுழியம் எந்த அளவிற்கு மிகவும் இன்றியமையாததோ அதனைப் போன்றே மானுடவியலுக்குப் பண்பாடு என்ற ஒன்றும் இன்றியமையாததாகும். பொதுவாக மானுடவியலின் அடித்தளமே பண்பாடு எனலாம். பண்பாடு என்பது மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு கருவியாகும். அக்கருவியைக் கொண்டு மக்கள் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். பண்பாடு என்பது மரபு வழியில் மானுடத்தைப் புரிந்து கொண்டுள்ள ஓர் அமைப்பு. இது கற்றலின் மூலம் பெறப்படுவது; கற்றல் நடத்தை முறையின் வழி உருவாக்கப்படுவது.

**வளைகுடா நாடுகளில் உணவு முறைகளும் விருந்தோம்பலும்**

பழந்தமிழர்கள் எவ்வகையில் விருந்தோம்பலில் சிறந்திருந்தனரோ அவ்வாறே கடல் கடந்து சென்றாலும் வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்கள் தங்களது மண்மணம் மாறாது உணவு முறைகளையும் விருந்தோம்பலையும் கடைப்பிடித்து வருவது சிறப்பிற்குரியதாகும். வளைகுடா நாடுகள் வெப்பம் மிகுந்த பகுதிகளானதால் நீர்ச்சத்து மிகுந்த உணவு முறைகளையே பெரிதும் உட்கொள்கின்றனர். இது

தமிழ்நாட்டு வெப்ப நிலைக்கும் உணவு முறைக்கும் ஒத்துப்போவது போன்று உள்ளது. மேலும், இங்குள்ள தமிழ் அமைப்பினர் நடத்துகின்ற விழாக்களில் அனைத்துத் தமிழர்கள் மட்டுமல்லாது பிற நாட்டினரையும் வரவேற்று உபசரித்து தாம் உண்ணும் மரபு சார்ந்த உணவு முறைகளைப் பரிமாறிக் கொடுத்து உண்ணும் தகைமையாளர்களாக விளங்குகின்றனர். இப்படிப்பட்ட பண்பாட்டைப் பற்றி, **“பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்” (குறள். 996)** என்கிறார் திருவள்ளுவர்.

**“தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே” (புறம். பா. 182)**

என்று புறநானூற்றுப் பாடலடிகள் வாயிலாக வளைகுடா நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் பிறர் நலம் சார்ந்த, சிறந்த மானுடப் பண்பு மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

**தமிழ் அமைப்பினரின் பண்பாட்டு நெறி**

பழந்தமிழர்கள் நாகரிகம், பண்பாடு போன்றவற்றில் மிகச்சிறந்து மேன்மையுடன் வாழ்ந்தனர். மேலும், அவர்கள் தங்கள் வாழ்வியலில் பிறரிடம் அன்பு காட்டியும், இழிகுணத்தைப் போக்கியும், வாய்மை நெறி தவறாமையும் போன்ற மிகச் சீரிய நற்பண்புகளுடன் வாழ்ந்துள்ளனர். இத்தகு உயரிய பண்பாட்டிற்கு, **"மனிதன் தன்னுடைய இலட்சியங்களை அடைய உருவாக்கிய பொருள் சார்ந்த, பொருள்சாராத வினைத்திட்பங்கள், வழிநுட்பங்கள் ஆகியவையே பண்பாடு எனப்படும்”1** என்று மானுடவியலாளர்கள் இலக்கணம் வகுத்துள்ளனர். இப்பண்பாட்டு நெறியானது **“மானிட இனத்தின் உயர் பண்புகளால் அமைவது”2** என முத்துலட்சுமி குறிப்பிடுகின்றார். **“மக்களின் நம்பிக்கைகள், வழக்கங்கள், சடங்குகள், கலைகள், சமுதாய மதிப்புகள் முதலியவற்றின் தொகுதியே பண்பாடு”3** என்பார் முனைவர் தா. ஈஸ்வர பிள்ளை. இவ்வகையில் உலக நடைமுறைகளை அறிந்து சான்றோர்கள் சென்ற செந்நெறி வழியே வளைகுடா நாடுகளில் வாழும் தமிழ் அமைப்பினரும் மிகச்சிறந்த மானுடவியல் சார்ந்த பண்பாட்டு நெறியில் வாழ்கின்றனர். இதனை,

**“ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;**
**'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;**
**'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;**
**'அன்பு' எனப்படுவது தன் கிளை செறாஅமை;**
**'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;**
**'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;**
**'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;**
**'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;**
**'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;” (கலித். பா. 133)**

என வரும் சங்கப் பாடலடிகள் கூறுகின்றன. அதாவது ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை என்னும் நல்லற நெறியில் தங்களது வாழ்வியல் கூறுகளை வகுத்துக் கொண்டு மானுடம் சார்ந்த பண்பாட்டு நெறிகளோடு வாழ்ந்து தாயகத்தின் பெருமையை நிலைநாட்டி வருகின்றனர்.

**தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்குச் செய்யும் சிறப்பு**

தமிழ்நாட்டில் இருந்து வளைகுடா நாடுகளுக்குப் பணியின் காரணமாக வரும் ஆசிரியர்களைப் போற்றும் வண்ணமாகச் செப்டம்பர் 5ஆம் நாளை ஒவ்வோர் ஆண்டும் ஆசிரியர் தின நன்னாளாகக் கொண்டாடுகின்றனர். இங்குள்ள தமிழ் அமைப்புகள் ஒரு நல்லாசிரியர் நல்ல கல்வித் தகுதி, மொழிப்புலமை, மாணவர்களுக்குக் கருத்துகளை எடுத்துக் கூறும் ஆற்றல், வகுப்பறை மேலாண்மை, சமூக ஈடுபாடு எனப் பலவற்றிலும் திறமை பெற்றிருத்தல் வேண்டும். அவ்வகையில் உள்ள ஒரு நல்லாசிரியர் பற்றிப் பவணந்தியார் பின்வருமாறு கூறுகின்றார்.

**"குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்**
**அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே"**

**(நன். நூ. 26)**

இவ்வாறு ஒரு நல்லாசிரியர் நிலம், மலை, நிறைகோல், மலர் போன்று இருத்தல் வேண்டும். மேலும், திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க கற்றனைத் தூறும் அறிவு என்று தமிழையும் தமிழ்நாட்டையும் பெருமைப்படுத்தும் விதமாகக் கற்று அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்களைச் சிறப்பிக்கப் பல விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கின்றது வளைகுடா நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள். அவர்களுக்குப் பல்வேறு போட்டிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி மகிழ்ச்சிப் படுத்துகின்றது. மாணவர்களின் மனநிலையை அறிந்து தமிழ்நாட்டு ஆசிரியர்கள் பாடங்களை மட்டுமல்லாது தமிழர் நலம் சார்ந்த ஒழுக்கம், பண்பாடு, நன்னடத்தை என அனைத்தையும் போதிக்கின்றனர். இதனால் மாணவர்களுக்கு மொழியைக் கற்கும் ஆர்வம் ஏற்படுகிறது.

**"தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும்**
**அறிவுயரும் அறமும் ஓங்கும்**
**இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்**
**தம்மொழியில் தாழ்ந்தால் வீழும்"**

என்ற அடிகளுக்கு ஏற்பத் தமிழ் அமைப்புகள் செயல்பட்டுத் தமிழை உயர்த்தித் தமிழால் தாமும் உயர்கின்றனர்.

**முடிவுரை**

பழந்தமிழ் மாந்தர்களின் சமயப் பழக்க வழக்கங்களிலும் பண்பாட்டு நெறிகளிலும் உள்ள நெறிகள் தற்போது வளைகுடா நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் காணப்பெறுகின்றன. அவர்களது வாழ்வியலில் கடைப்பிடிக்கப்பட்ட சிறந்த பண்பாட்டுக் கூறுகள் இன்றளவும் வாழக்கூடிய தமிழர்களிடமும் ஒத்துப் போவதைக் காண முடிகின்றது. மேலும், வளைகுடா நாடுகளில் பன்னாட்டு மாந்தர்கள் வாழ்கின்ற போதும்கூடத் தமிழ் அமைப்பினர் மிகச் சிறந்த பண்பாட்டு நெறியினைக் கடைப்பிடித்துப் பிரிவினை கருதாது அறப்பண்பாட்டுடனும் விருந்தோம்பலைச் செய்து மானுடத்தைப் போற்றி வருகின்றனர்.

**சான்றெண் விளக்கம்**

1. ஜெ. நாராயணன் (மொ.ர்), சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப. 435
2. முனைவர் வே. முத்துலக்குமி, பண்பாட்டுச் சிந்தனைகள், ப. 31
3. முனைவர் தா. ஈஸ்வரப் பிள்ளை, மணிமேகலை - சமுதாயப் பார்வை, ப. 71
4. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 80
5. வாழ்வியற் கலைக்களஞ்சியம், ப. 795

**சுருக்கக் குறியீடுகள்**

குறள். - திருக்குறள்

நன்.நூ. - நன்னூல் நூற்பா

கலித். – கலித்தொகை

**துணைநூற்பட்டியல்**

1. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரி நிலையம், சென்னை, 1966.

2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2019.

3. பக்தவத்சல பாரதி, மானுடவியல் கோட்பாடுகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2019.